செ.வெ.எண் : 266 நாள் : 26.11.2025

# செய்தி வெளியீடு

## சமூகநீதி விடுதிகளில் பயிலும் மாணவியர்களுக்கு கராத்தே/சிலம்பம் பயிற்சியளிக்க பெண் பயிற்சியாளரைக் கொண்ட பயிற்சி நிறுவனம் வாயிலாக விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகிறது என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

சென்னை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் 06 சமூகநீதி மாணவியர் விடுதிகளில் பயிலும் மாணவிகளின் சுயபாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கையினை ஊக்கப்படுத்தும் வகையில் தற்காப்புக்கலையில் அடிப்படை பயிற்சியினை வழங்க அவசியம் என்பதால் சமூகநீதி விடுதிகளில் பயிலும் மாணவியருக்கு சிலம்பாட்டம் மற்றும் கராத்தே பயிற்சியினை விடுதிகளில் பயிலும் மாணவியர்களுக்கு அளிக்கும் போது மாணவியர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பயிச்சியளிக்க பெண் பயிற்சியாளரைக் கொண்ட பயிற்சி நிறுவனம் வாயிலாக கராத்தே/சிலம்பம் கலைகளை பயிற்சியளிக்க 28.11.2025–குள் விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது

### நிபந்தனைகள்

1.சிலம்பம் தற்காப்பு கலை பயிற்சியினை பொறுத்தவரை கலை மற்றும் பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் பதிவு செய்துள்ள மற்றும் அத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்..

2.கராத்தே மற்றும் சிலம்பம் அடிப்படை பயிற்சி வழங்க தேர்ந்தெடுக்கும் நிறுவனமானது அரசு அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ,

மாணவியருக்கு குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் கராத்தே மற்றும் சிலம்பம் பயிற்சி வழங்கிய அனுபவம் இருக்க வேண்டும்.

3. கராத்தே அடிப்படை பயிற்சியினை 3 மாதங்களுக்கு ஒரு வாரத்திற்கு 3 பயிற்சிகள் வீதம் 36 பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

4. சிலம்பம் அடிப்படை பயிற்சியினை 2 மாதங்களுக்கு ஒரு வாரத்திற்கு 3 பயிற்சிகள் வீதம் 24 பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: | **மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், 2-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-600001.** |
| விண்ணப்பம் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி: | **dbcwochennai@gmail.com** |

***********

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலம்**
**சென்னை –01.**